# நற்கொடை.

## கிறிஸ்துவே மத்தியஸ்தர்.

இரு பகுதியாருக்கு இடைநின்று நடுநியாயம் பேசுதலாகிய மத்தியஸ்தமாவது என்ன என்பதை யாவரும் அறிவோம். ஒருவன் அரசாட்சியில் ஒரு உத்தியோகம்பெற்றுக்கொள்ள விரும்பினால் அவன்தானே நேராக இராசாங்க காரியகர்த்தனிடம் போவதற்குப் பதிலாய் தனக்காக அக் காரியகர்த்தனிடம் பரிந்துபேசும்படி தகுந்த ஒரு ஆளைக் கேட்கிறான். நமது தின சீவியத்திற்தானும் பலவேளைகளில், யாரோ ஒரு சினேகிதனுடைய மத்தியஸ்தத்தின் மூலமாக நமது தொழில்களைச் செய்கிறோம்.

மார்க்க காரியத்தில் மனுஷனாகிய யேசுக்கிறிஸ்து என்பவர் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார் என்று விவிலிய நூல் கூறுகிறது. இதைக் கேட்கும் ஒருவன் மார்க்க காரியத்தில் நமக்கொரு மத்தியஸ்தர் வேண்டியதென்ன? ஒருபிள்ளை தனது பிதாவினிடத்திற்குத் தானே நேராய்ப் போகிறது. நான் எனது பரமபிதாவினிடத்திற்கு ஏன் நேராய்ப்போகக்கூடாது? நான் அவரைக் கோபப்படுத்தினாலும் அவர் என்னிலே பட்சமுள்ளவராயிருந்து என்னை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார் என்று நினைக்கக்கூடும். ஆனாலும் தேவனுக்கும் எங்களுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. தேவன் எல்லைப்படுத்தப்படாதவராய் இருக்கிறார். நாங்களோ எல்லை உள்ளவர்களாய் எங்கள் சிந்தனை முதலியவைகளிலேதானும் எல்லைப்படுத்தப்பட்டிருக்கிறோம். எல்லையற்றவராகிய தேவனைப்பற்றி நாங்கள் சில காரியங்கள் அறியக்கூடும். ஆனால் அவரைப் பூரணமாக அறிகிறதற்கு எங்களால் ஏலாது. இதைவிட வேறும் ஒரு வித்தியாசமுண்டு. தேவன் பரிசுத்தர், மனுஷனோ பாவமுள்ளவன், ஒரு மத்தியஸ்தரின்றிப் பரிசுத்த தேவனைக் கிட்டிச் சேரக்கூடியவனல்ல. ஆகையால் மனுஷனுக்கு மத்தியஸ்தம் மிக அவசியம். மத்தியஸ்தர் தேவனுடைய மனதிலுள்ளதை

வெளிப்படுத்திப் பாவமுள்ள மனுஷனின் நியாயத்தை எடுத்துப் பரிந்துபேசித் தேவனைக் கிட்டிச்சேரவழிபண்ணுகிறார்.

ஒருபோது பின்னொருவன், மத்தியஸ்தர் ஒருவர் அவசியம் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்; ஆனால் விவிலிய நூலிற் கூறப்பட்டிருக்கிற கிறிஸ்துவானவர் அந்த மத்தியஸ்தராயிருக்கவேண்டியதென்ன? ஒரு தேவதூதன் அல்லது விசேஷ பரிசுத்தவான் ஒருவர் அந்த மத்தியஸ்தராய் ஏன் இருக்கக்கூடாது என்று கேட்பான். ஆனால் பாவ மனுஷருக்குள் ஜீவித்து அவர்களுடைய நிலைமையைத் தன் அநுபவத்தால் அறிய இயலாதவனாகிய பரிசுத்த தேவதூதன் ஒருபோதும் மத்தியஸ்தனாக இருக்கக்கூடாது.

பரிசுத்த மனுஷனும் தேவனுக்குப் பதிலாக நிற்கக் கூடாது. எந்தக் காலத்திலாவது இந்த உலகத்தில் வாசம்பண்ணின ஆக உத்தம மனிதன்தானும் பாவியாயிருக்கிறதினால் தனக்கே ஒரு மத்தியஸ்தரை வேண்டியவனாயிருப்பான். மத்தியஸ்தரானவர் இருபக்கத்தவர்களுக்கும் இடையே நிற்கத்தக்கதன்மையுள்ள ஒருவராய் இருக்கவேண்டும். அவர் தெய்வீகம் மனுஷீகம்என்னும் இருதன்மைகளையும் உடையவராய் இருக்கவேண்டும். இயேசுக்கிறிஸ்துவாகிய ஒரேயொருவர் மாத்திரம் இத்தன்மைகளுடையவராயிருக்கிறதினால் அவர் மாத்திரம் மத்தியஸ்தராயிருக்கத்தக்கவர்.

விவிலிய நூலிலே இந்த மத்தியஸ்தர் ஓர் தெய்வீக போதகராக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் பேசினது போல வேறொருவனும் பேசினதில்லை. வேறே எவராவது கிருபையும் சத்தியமும் நிறைந்த அதிசயமான வார்த்தைகளை எப்போதாவது எங்களுக்கு அருளினதில்லை. அவர் தேவனுடைய உருக்கத்தையும் அன்பையும் எங்களுக்கு வெளிப்படுத்தினார். நமது பிதா எங்களில் வைத்திருக்கிற பட்சத்தை எங்களுக்கு நிச்சயப்படுத்திக் காட்டி அவருடன் ஒப்பரவாகும்படி நம்மை ஏவுகிறார். அவர் மோட்சத்தின் மகிமைகளை நமக்குப் பிரத்தியட்சமாய்க் காண்பித்து உலக தோற்றம் முதல் எங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட அந்த இடத்தைக் குறித்துத் தெளிவாய்ச் சொல்லி அதிலுள்ள "அநேக வாசஸ்த

ங்களுக்குச் செல்லும் வழியை நமக்குக் காண்பிக்கிறார். ஆ! அதிசயமான திவ்விய போதகர். ஆ! அதிசயமான சிவவாக்குகள்.

இன்னும் எங்கள் மத்தியஸ்தராகிய கிறிஸ்து மகா பிரதான ஆசாரியராயிருக்கிறாரென்று விவிலிய நூல் கூறுகின்றது. அவர் தம்மை ஒரு பலியாக ஒப்புக்கொடுத்து மகா பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரியத் தொழிலை நடப்பிக்கிறார். அவர் நித்திய பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் சனங்களின் பாவத்தைத் தாம் சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டிருக்கிறார். அவர் நாம் வழங்கும் ஆசாரியர் என்னும் சொல்லினளவில் மாத்திரமல்ல, அவர் உண்மையான ஆசாரியர்; அவர் மனுஷரைத் தேவனுடன் ஒப்புரவாக்குகிறார். அவர்களுடைய பாவங்களுக்காகப் பிராயச்சித்தஞ் செய்கிறார். சனங்களுக்காகப் பரிந்து பேசுகிறார். அவர் தாமே மனுஷருடைய அக்கிரமங்களுக்காக அடிக்கப்பட்ட பலியாகிய தேவ ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். அதினால் முன்னே தூரமாயிருந்த நாங்கள் இப்பொழுது கிறிஸ்து யேசுவுக்குள் கிறிஸ்துவின் விலைபெற்ற இரத்தத்தினாலே சமீபமானோம்.

மேலும் விவிலிய நூலானது மத்தியஸ்தரை ஓர் இராசாவாகக் கூறுகிறது, யாக்கோபிலிருந்து ஒரு "நட்சத்திரம்" உதித்தது; இஸ்ரவேலிலிருந்து "ஒரு செங்கோல்" எழும்பினது. கிறிஸ்துவானவர் சீயோன் பருவதத்தின் மேல் இராச்சியத்தை ஸ்தாபித்து "இராசாதிராசாவும் கர்த்தாதிகர்த்தாவுமாக" அரசாளுகிறார். அவராலே மீட்கப்பட்ட சனங்கள் அவருடைய பிரசைகளாக இருக்கிறார்கள். அவருடைய ஆளுகை நீதியும் சமாதானமும் நிறைந்த ஆளுகையாயிருக்கிறது. சாதிகள் அவருக்குச் சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகள் அவருக்குச் சொந்தமாகவும் இருக்கும். சகல சனங்களும் சாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராசரீகமுங் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய இராச்சியம் அழியாததுமாயிருக்கும்."

மேலே கூறப்பட்டவைகளினாலே எங்கள் மத்தியஸ்த

ரானவர், தீர்க்கதரிசிக்குரியதும் ஆசாரியனுக்குரியதும் இராசாவுக்குரியதுமான மூன்று தொழில்களைச் செய்கிறவராக விளங்கும். ஒரேயொருவர் மாத்திரம் மத்தியஸ்தராக இருக்கக்கூடும். அவரும் இந்த மூன்று தொழில்களையும் தம்மில் பொருந்தினவராக இருக்கவேண்டும். இவைகளில் ஒன்றாகிலும் அவரில் இல்லாதிருந்தால் அவர் பூரண மத்தியஸ்தராய் இருக்கக்கூடாது. அவர் தேவனை வெளிப்படுத்துகிறவராகவும் மனுஷரைத் தேவனோடு ஒப்புரவாக்குகிறவராகவும், சமாதானத்தின் இராசபிரபுவாகவுமிருக்கிறார்.

புத்தியீனமான நடக்கையினால் தன் பிதாவைப் பிரியவீனப்படுத்தின வாலிபன் ஒருவனிருந்தான். பிதா மகனுடைய நடக்கை தனக்கு வெறுப்பானதினால் அவனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான். அவன் கோபத்தோடே போய்-அயலூரிலே வசித்தான். அவன் மாதா தன் அருமையான மகனினிமித்தம் அதிகம் துக்கப்பட்டு மனத்துயரத்தினால் வரவர நோயாளியாகி மரணப்படுக்கையிற் கிடந்தாள். அப்போது மகன் அழைக்கப்பட்டான். அவன் வந்து மாதாவின் கட்டிலின் ஒருபக்கத்தில் நின்றான். தகப்பனோ மற்றப்பக்கத்திலே நின்றான்.

தாய் அவர்களுடைய கைகளைத் தேடிப் பிடித்து மகனுடைய கையைப் பிதாவின் கையில் வைத்து இரண்டையும் இறுக்கிப் பிடித்தபடியே மரித்துவிட்டாள். பிதாவும் மகனும் ஒப்புரவானார்கள்.

எங்கள் மத்தியஸ்தராகிய கிறிஸ்து பாவ மனுஷனின் கையைப் பிடித்துப் பரிசுத்தரான தமது பிதாவின் கையிலே வைத்து பூரணமாக ஒப்புரவாக்குகிறார். நாங்கள் அவருடைய மத்தியஸ்தம் வேண்டாமென்று மறுக்கக்கூடாது. அதுமாத்திரமே இரட்சிப்புக்கு வழி. அந்த மத்தியஸ்தரை வேண்டாமென்று தள்ளுவது சீவனை வேண்டாமென்று தள்ளுவதாக இருக்கிறது. அப்படிச் செய்கிறவர்கள் தங்கள் ஞான சீவனை அழிக்கிறார்கள்.

“தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. மனுஷனாகிய கிறிஸ்து யேசுவே அவர்.

---

Strong and Asbury, Printers: Manippay, 1890.—Ed. 3000.